## டான்சி

டான்சி என்று அழைக்கப்படும் தமிழ்நாடு சிறுதொழில் நிறுவனம் 1965ஆம் ஆண்டு, 64 சிறுதொழில் கூடங்களுடன் சுமார் 7000 பணியாளர்களைக்கொண்டு உருவாக்கப்பட்டதென்பதை அனைவரும் அறிவீர்கள்.

- கடந்த ஆட்சி காலத்தில் டான்சியில் 28 தொழிற்கூடங்கள் மட்டுமே இருந்தது. சுமார் ரூ.35 கோடியிலிருந்து ரூ.54 கோடி வரை உற்பத்தி மற்றும் விற்பனை செய்துவந்திருந்தது.

- கடந்த இரண்டு ஆண்டுகளில், அரசின் சீரிய முயற்சியாலும், ஊக்குவிப்பாலும் இயங்கப்படாமலிருந்த தொழிற்கூடங்களுக்கு உயிரூட்டி, 2007–08ல் இந்நிறுவனம் மொத்தம் 36 தொழிற் கூடங்களை இயங்கவைத்து ரூ.114.43 கோடி விற்பனை மற்றும் ரூ.113.57 கோடி உற்பத்தி செய்து ரூ.725.17 இலட்சம் இலாபம் ஈட்டி சாதனை படைத்துள்ளது. அனைத்து அலகுகளும் இலாபத்தில் இயங்கி வருகிறது.

  பள்ளிக் கல்வித் துறையின் (நபார்டு திட்டமூலம்) ரூ.69 கோடிக்கான பணி ஆணையைப் பெற்று தமிழ் நாட்டின் அனைத்து நகரங்கள் முதல் குக்கிராமங்கள் வரையிலான பள்ளிக்கூடங்களுக்குத் தேவையான அறைகலன்களை இந்நிறுவனம் மிகக் குறைந்த காலத்தில், குறைந்த விலையில், சிறந்த தரத்துடன் வழங்கி சாதனைப் படைத்துள்ளது.

- டான்சி, 'ராஜீவ் காந்தி கிராமிய மின் வழங்கல் திட்டத்தின்கீழ்' தமிழ் நாடு மின்வாரியத்திடமிருந்து ரூ.487.57 கோடிக்கு, தமிழ்நாட்டில் 26 மாவட்டங்களுக்கு, ஒட்டுமொத்த ஒப்பந்தமுறையில் (Turn Key basis) மின் கம்பிகள் மற்றும் அது சம்பந்தமான கருவிகளை வழங்கி, நிறுவி, சோதனைசெய்து இணைப்புகொடுக்கும் மிகப்பெரிய ஆணையை பெற்றுள்ளது. இதனால் டான்சி கடந்த ஆண்டைப்போல இந்த ஆண்டும் மிக உயர்ந்த உற்பத்தியை எய்தும்.

- டான்சி ஓரீராண்டுகளில் தொடர் ஆதாய இழப்பை சரிகட்டி அரசுக்கு பங்கு ஈவுத் தொகை செலுத்தும் நிலைக்கு உயர்ந்துவிடும் என்பதனை பெருமையுடன் தெரிவித்துக் கொள்ளுகிறோம்.

- டான்சியின் கடந்த ஆறு ஆண்டுகளின் இலக்கு, உற்பத்தி, விற்பனை, மற்றும் இலாபம் நிலையின் விபரம்:–

(ரூபாய் இலட்சத்தில்)

| ஆண்டு | உற்பத்தி | | விற்பனை | | இலாபம் |
|---|---|---|---|---|---|
| | இலக்கு | செயல்பாடு | இலக்கு | செயல்பாடு | |
| 2002–03 | *5515* | 4270 | *5500* | 4283 | (–) 240.08 |
| 2003–04 | *4645* | 5119 | *4650* | 4978 | (–) 90.06 |
| 2004–05 | *5200* | 5375 | *5200* | 5421 | (+) 9.74 |
| 2005–06 | *4800* | 6040 | *4800* | 6180 | (+) 52.21 |
| 2006–07 | *6000* | 6083 | *6000* | 5767 | (+) 95.94 |
| 2007–08 | *11000* | 11300 | *11000* | 11423 | (+) 725.17 |

நடப்பு ஆண்டு 2008–09ல் ரூ.18100 இலட்சம் விற்பனையை எட்டும் என எதிர்பார்க்கப்படுகிறது.

- அரசின் திட்டங்களை விரைந்து முடித்திடும் டான்சியை புதுப்பொலிவுடன் விரைவில் காணலாம்.

வெளியீடு, இயக்குநர்.
செய்தி, மக்கள் தொடர்புத் துறை,
தலைமைச் செயலகம், சென்னை–9